# தொழில் முனைவோர்...



தொழில் முனைவோர் ஆவதற்கான தேவைகள் குறித்து பொறியியல் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி சென்னையை அடுத்த ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. இதில், கல்லூரியின் தொழில் முனைவோர் பிரிவு சார்பாக இ. குருசாடார்ஸ், முதன்மை செயல் அதிகாரி சதீஷ்ராஜ் ஆகியோர் மாணவர்களுடன் கலந்துரையாடினர். உடன் இயக்குநர் மாறன் உள்ளிட்டோர்.

# ரூ.10 லட்சம் தங்கக்கட்டி கடத்தியவர் கைது

மதுரை, டிச29: இலங்கையில் இருந்து ரூ.10 லட்சம் மதிப்புள்ள தங்கக்கட்டிகளை கடத்தி வந்த நபரை மதுரை விமானநிலையத்தில் சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகா எஸ்பி பட்டினத்தைச் சேர்ந்தவர் ஜாகீர் உசேன் (40). இவர், இலங்கையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை மாலை மிகின் லங்கா விமானம் மூலம் மதுரை வந்தார். விமானநிலையத்தில் அவரை சந்தேகப்பட்டு சுங்க இலாகா அதிகாரிகள் சோதனையிட்டனர். அப்போது, அவர் தனது ஆசன வாயிலில் மறைத்து வைத்து 349 கிராம் எடை கொண்ட 3 தங்கக் கட்டிகளை மறைத்து வைத்திருந்ததை கண்டறிந்தனர்.

அவற்றின் மதிப்பு ரூ.10 லட்சமாகும். இதையடுத்து ஜாகீர் உசேனை சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.